**தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை,**
**சென்னை–5.**

செ.வெ.எண்: 51 நாள்: 13.01.10

**பத்திரிக்கைச் செய்தி**

உணவுத் தேவையில் அரிசி மற்றும் சிறுதானியங்கள் பிரதான பங்கு வகித்தாலும் சமீப காலமாக மக்களின் உணவு பழக்க வழக்கங்களில் காய்கறி மற்றும் பழங்களின் தேவை இன்றியமையாததாக உள்ளது. எனவே, உணவு உற்பத்தியில், நெல், சிறுதானியம் மட்டுமின்றி தோட்டக்கலைப் பயிர்களான காய்கறி மற்றும் பழங்கள் உற்பத்தியை பெருக்க வேண்டி அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களை செம்மையாக செயல்படுத்த தொழில் நுட்ப அலுவலர்களுக்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

குறிப்பாக மலர் சாகுபடியில் நாம் உள்நாட்டுத் தேவையை பூர்த்தி செய்வதோடு, வெளிநாடுகளில் அதிக வரவேற்பு உள்ள மலர்களை சாகுபடி செய்து ஏற்றுமதி செய்யும் வகையில் உற்பத்தியை பெருக்குவதற்கான விவரங்கள் மற்றும் தோட்டக்கலைத் துறையில் செயல்படுத்தும் அனைத்து திட்டங்கள் அடங்கிய நாட்காட்டியை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள், வேளாண்மை ஆணையர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (13.1.2010) வெளியிட்டு, தமிழ்ப்புத்தாண்டு மற்றும் இனிய பொங்கல் வாழ்த்துக்களை விவசாய பெருமக்களுக்கும், தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண்மைத் துறை தொழில் நுட்ப அலுவலர்களுக்கும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலர் திரு நந்தகிஷோர், இ.ஆ.ப., தோட்டக்கலைத்துறை இயக்குநர் டாக்டர் சந்திரமோகன், இ.ஆ.ப., வேளாண்மைத்துறை ஆணையர் திரு கோசலராமன், இ.ஆ.ப., வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணி மேலாண்மை) திருமதி மதுமதி, இ.ஆ.ப. மற்றும் தோட்டக்கலைத் துறை, வேளாண்மைத் துறை கூடுதல் இயக்குநர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

(டாக்டர் பி. சந்திரமோகன்)
தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9